

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி குடிமங்கலம் கிழக்கு மற்றும் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை உறுதி திட்ட நிதி ரூபாய் 4,034 ஆயிரம் கோடியை தமிழ்நாட்டுக்கு தராமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இதில் ஒன்றிய செயலாளர்கள் சா.ராஜமாணிக்கம், அணிக்கடவு ச.கிரி உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ,கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள நாகமங்கலத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் தர வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை தராத ஒன்றிய அரசைக் கண்டித்து மத்திய மாவட்டச் செயலாளர் .வைரமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் மணிகண்டம் ஒன்றிய செயலாளர் மாத்தூர் கருப்பையா, மற்றும் கழக நிர்வாகிகள் ராம்ஜி நகர் குணா, காந்தி, தங்கரத்தினம் ஆரோக்கியசாமி, வெள்ளைச்சாமி ,லாரன்ஸ், முத்துக்குமார் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்

### குளித்தலை தொகுதி-

# தோகை மலையில் இருந்து கரூருக்கு புதிய பேருந்து வழித்தடம் தாரீர்!

## சட்டப்பேரவையில் - இரா.மாணிக்கம் கோரிக்கை !

சென்னை. ஏப்.5-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**இரா.மாணிக்கம்:** குளித்தலை தொகுதி, தோகைமலை பகுதியிலிருந்து கரூர் செல்வதற்கு புதிய வழித்தடம் வேண்டும் என்பது அந்தப் பகுதியினுடைய நீண்டகால கோரிக்கை. ஆகவே,



அமைச்சர் அவர்கள், பில்லூர், பாதிரிபட்டி, தோகைமலை, மைலம்பட்டிபாளையம் வழியாக ஒரு புதிய வழித்தடம் ஏற்படுத்தி புதிய பேருந்து நிலையம் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா?

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** அண்ணன் மாணிக்கம் அவர்கள் கோருகின்ற வழித்தடத்தில், வேறு பேருந்துகளை நீட்டித்து இயக்க முடியுமென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். புதிதாகத்தான் தேவையென்றால் புதிய பேருந்துகள் வேண்டும். இப்பொழுது வருகின்ற புதிய பேருந்துகள், பழைய பேருந்துகளை, காலாவதியாகின்ற பேருந்துகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு அந்த இடங்களில் இயக்குவதற்கான நடவடிக்கைதான் தொடர்ந்து எடுக்கப்படுகிறது. புதிய பேருந்து வரும்போது அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, ஏப். 5 -

தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தருமபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் மாநில விவசாய அணி துணை செயலாளர் டி.எம்.அரியப்பன், அரூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் சி.செல்லதுரை மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர், திருவண்ணா மலை



வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எவரெஸ்ட் என்.நரேஷ்குமார் ஆகியோர்களின் முன்னிலையில் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி நிலை குழு உறுப்பினர்கள் (BLC) ஆகியோர்களை தேர்தல் களப்பணிக்கு உட்படுத்த மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் மூலம் (Whatsapp Channel Link)ல் கழக உறுப்பினர்களை இணைக்கும் பணி, BLA2 மற்றும் BLC ஆய்வுக்கூட்டம் போன்ற தேர்தல் பணிகள் குறித்து இன்று (05.04.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அதுசமயம், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக செயலாளர்களும், பேரூர் கழக செயலாளர்களும், மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி, இளைஞரணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி ஆகிய அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தேர்தல் களப் பணிகள் குறித்தும், BLA2 மற்றும் BLC ஆய்வுக் கூட்டம் குறித்தும்

இவ்வாறு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தெரிவித்துள்ளார்.





